DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.243 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-5 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பூமிநாதன்(சிறப்பு சார்பு ஆய்வாளர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u/s 355 BNSS petition filed and allowed)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 18.05.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது திருவாடனை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் கடந்த 2023 வருடம் எங்கள் காவல் நிலையத்தில் சுந்தரமூர்த்தி என்பவர் சார்பு ஆயவாளராக பணிபுரிந்து வந்தார். தற்போது அவர் பணிமாறுதல் ஆகி வெளி வேலையாக அவசர வேலையில் இருப்பதால் அவரால் நீதிமன்றத்திற்கு ஆஜராக இயலவில்லை. அவரின் கையெழுத்து எனக்கு நன்கு

தெரியும் என்பதாலும் ஆணவங்கள் அடிப்படையிலும் அவரது சார்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 02.11.2023 தேதி மதியம் 1.00 மணியளவில் சார்பு ஆயவாளர் சுந்தரமூர்த்தி என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது பால்சாமி மனைவி மாரிமுத்து என்பவர் நிலையம் ஆஜரகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேறப நிலைய குற்ற எண். 287/23 u/s 294(b),323, IPC , 4 of TNPHW ACT ஆக வழக்கு பதிவு செய்தார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.3 ஆகவும், முதல் தகவல்அறிக்கை அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கு கோப்பினை அவரதுவிசாரணைக்கு எடுத்து கொண்டு அதே நாள் மதியம் 2 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் மகேஷ்வரன், குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார். பார்வைமகசர் அ.சா.ஆ.5 ஆகவும் மாதிரிவரைபடம் அ.சா,.ஆ,.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் சாட்சிகளான மாரிமுத்து, மகேந்திரன், பால்சாமி.ஆரோக்கியமேரி, மற்றும் பார்வைமகசர்மகசர் சாட்சிகளை தனி தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

2 அவரது விசாரணையில் சாட்சிகளை விசாரணை செய்ததிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மையனெ தெரியவந்தது.இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை பல இடங்களில் தேடி வந்த நிலையில் 14.11.2023 தேதி 20 மணியளவில் நிலையம் ஆஜராக இவ்வழக்கின் எதிரியான முத்துமணிக்கம் என்பவரை கைதுசெய்வதற்கான தக்க காரணம்கூறி சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தக்க பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் 16.11.2023 தேதி 13.30 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரி பூமிநாதன் என்பவரை கைதுசெய்வதற்கான தக்க காரணம்கூறி அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தக்க பிணையில் விடுவித்துள்ளார்.

3. இவ்வழக்கில் காயம்பட்ட மாரிமுத்து என்பவருக்கு சிகிக்சை அளித்த திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் சபரிஜா என்பவரை விசரணை செய்து அவரிடமிருந்து காயம்பட்ட நபருக்கான விபத்து பதிவேட்டு அறிக்கையுடன் கூடிய காயச்சான்று பெற்று

அவருடைய வாக்குமூலத்தையும் பெற்றுள்ளார். மாரிமுத்து என்பவரின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.7 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. பின்னர்அவரது விசாரணையை முடித்து கொண்டு எதிரிகள் மீது அதே பிரிவுகள் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்துள்ளார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. புகார்தாரர் அளித்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

2. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3.இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம்இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.